விளவங்கோடு தாலுகாவில் சப்-ஸ்டேஷன் அமைத்தல்.

140—(* வினா எண். 13746) திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலுகாவில் மின்னழுத்தக் குறைவை நிவர்த்திக்க சப்-ஸ்டேஷன் அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

(ஆ) இப்பணிக்காக அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) குழித்துறையில் 10 மெகாவோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட ஒரு மின்மாற்றியுடன் கூடிய ஒரு 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினை 1989 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இயக்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) குழித்துறை 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் நிறுவுவதற்கான திட்டத்தொகை ரூ. 93.02 இலட்சம், 1988–89 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

கரிம்பேட்டில் திருமண மண்டபம் கட்டுதல்.

141—(*வினா எண். 13749) திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு அருள்மிகு நாதாளீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு அருள்மிகு நாதாளீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமாக திருமண மண்டபம் கட்டப்பட்டு, அது 1–7–1986 முதல் வாடகைக்கும் விடப்பட்டு வருகிறது.